காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹூசைன் அவர்கள் அருளியது**

ஒப்புவமை இல்லாத வல்லானின் நேசா
வானோரும் போற்றும் வாகான ராஜா
நட்புடனே எம் நெஞ்சில் நிலையாக வாழும்
நாயகர் கௌதுல் அ∴ளம் குருநாதா ... ஒப்புவமை

1. வரலாற்றின் திருநாடு ஈரான்அமைந்த
வடிவான ஜீலான் பதிமீதுயர்ந்த
திரனாளர் அபுஸாலிஹூ தவமைந்தராக
தோன்றிய கௌதுல் அ∴ளம் குருநாதா ... ஒப்புவமை

2. முத்து முஹம்மதர் முஸ்த∴பா தாஹா
மேலான வழியில் வெளியான பேரா
தத்துவமெஞ்ஞான தகையோருக்கெல்லாம்
தலையான கௌதுல் அ∴ளம் குருநாதா ... ஒப்புவமை

3. ஆதார உரையாலே அழகான தீனை
அழியாமல் இங்கே உயிராக்கிவைத்தீர்
காதிர்முஹ்யித்தீன் எனும் தூயபேரால்
கமழ்கின்ற கௌதுல் அ∴ளம்குருநாதா ... ஒப்புவமை

4. கல்லான இதயங்கள் கனிகின்ற வண்ணம்
கனிவான மொழியால் கருத்தீந்த வள்ளல்
பொல்லாங்கு வினைமாற்றும் பக்தாதின்வேந்தே
பீரான கௌதுல்அ∴ளம் குருநாதா ... ஒப்புவமை

5. ஓராயிரம்முறை ஒழுங்காய் உம்நாமம்
ஓதிடில் நேரே வருவேனென்றீரே
சீராயுமின் புகழ் சாற்றிடும்எம்மை
சிறப்பாக்கும் கௌதுல் அ∴ளம்குருநாதா ... ஒப்புவமை

6. மஹ்மூத் ஹூசைன் விண்டமணியான பாடல்
மௌலிது மன்றில் மங்கையர் கூடி
தகுமோடு பாடினும் தயவாக ஏற்பீர்
தஸ்தகீர் கௌதுல் அ∴ளம் குருநாதா ... ஒப்புவமை

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

மாந்தருளே நல்மாணிக்கமாக
நீந்திடும் வானொளி நிலவாக
வேந்தருளே மாவேந்தருமாக - சாந்தி நபி
ஏந்தலரே எம்மின்கோமானே

1. மணற்பாலை சூழும் மாமக்கா பொன்னூரில்
மாதுவாமினாக்கண்
மணியாக பிறந்துமே பாரோர் தம்வாழ்வை
மேன்மையாக்கினீரே
மஹ்மூதராக மலைதீபமாக மதிவாணராக வந்தீரே... மாந்தருளே

2. குலப்பாகுபாட்டினால் என்றும் போராடி
குருதிசிந்தி நோரின்
குடித்தாடிப் பாடியே வீணே தம்வாழ்வை
யோரம் பண்ணியோரின்
உளமாற்றி தூயவழிகாட்டி கூர்மையறிவாளராக்க வந்தீரே... மாந்தருளே

3. படைத்தாளும் நாயனாம் வல்லோன் ஒன்றேதான்
பணிந்து வணங்குவீரே
படிமீது பிறப்பிலே பேதம் கொண்டேதான்
பகமை கொள்ளல் தீதே
பகர்ந்தேயிவ்வாறு அகத்தே மெய்யூற பகவாழ்வு நல்க-
வந்தீரே... மாந்தருளே

4. தனம் தேடிவாழுவோர் தம்மில் இல்லார்க்கே
தர்மமீதல் வேண்டும்
மனப்பூர்வமாகவே நாதியற்றோர்க்கே
மகிழ்ந்து உதவவேண்டும்
எனக்கூறி பண்பின் சுடரேற்ற அன்பின் திருமேதையாக-
வந்தீரே... மாந்தருளே

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுஸைன் அவர்கள் அருளியது**

வாழ்வீரே கூடி வாழ்வீரே
வளம்பொங்க நீடு வாழ்வீரே
வரையேதிலாத கருணை ஏகன்
அருளோடு நாளும் வாழ்வீரே ... வாழ்வீரே

1. வடிவான நபிகள்திலகம்
சொன்ன வாகான மொழியை பேணி
படிமீது மன்றல் புரிந்தோரே
பண்போடு கூடி வாழ்வீரே ... வாழ்வீரே

2. எழிலான காவின் மலர்கள்
கொண்டு இணைவான மாலை அணிந்தே
இனிதான மன்றல் செய்தோரே
இணையோடு கூடி வாழ்வீரே ... வாழ்வீரே

3. உறவோர்கள் அன்னை தந்தை
அறம் உயர்ந்தோர்கள் ஆசிஅணிந்தே
சிறப்பான தான மணவாழ்வில்
செழிப்போடு யாண்டும் வாழ்வீரே ... வாழ்வீரே

4. மறையோதும் சாரந் தெளிந்து
நபி மஹ்மூதர்பாதை நடந்து
முறையோடு வாழ்ந்த முன்னோரின்
மதிப்போதம் போல வாழ்வீரே ... வாழ்வீரே

5. இந்நாடும் தீனின் குலமும்
என்றும் இனிதோங்கும் பணிகள்புரியும்
பொன்னான சேய்கள் பலகொண்டு
புகழோடு நீடு வாழ்வீரே ... வாழ்வீரே

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுஸைன் அவர்கள் அருளியது**

அணைந்திடாத தீபமாம் அண்ணல் நபிதம் செல்வியாம்
அகந்தனில் வதிந்திடும் அன்னை சித்திபாத்திமா ... அணைந்திடாத

1. முனைந்த இந்த பாரிலே முதன்மையாக தீனிலே
இணைந்து மாதர்குலத்திலே இலங்கிடும் கதீஜத்தின்
மனையரம் என்னும் மலர்காவில் தென்றலாம்
அகம்தனில் வதிந்திடும் அன்னை சித்தி பாத்திமா...
அணைந்திடாத

2. வலிமை சூடும் தோலிலே வாய்மை சூடிநெஞ்சிலே
பொழிவடைந்த தீரராம் புனித மார்க்க வீரராம்
அலியவர் தமின் அன்பு சார்ந்த துணைவியார்
அகம்தனில் வதிந்திடும் அன்னை சித்தி பாத்திமா...
அணைந்திடாத

3. கணவன் காலின் அடியிலே கனகவீடு சுவலினனும்
மணக்கும்வாக்கை மணத்திலே மதித்து வாழ்ந்த காரணம்
கர்ப்பின் நங்கை நல்லால் பெரும் கண்ய பாடமாம்
அகந்தனில் வதிந்திடும் அன்னை சித்தி பாத்திமா...
அணைந்திடாத

4. சாந்தி மார்க்க பெண்களாம் தாரகைகள் நடுவிலே
நீந்துகின்ற தன்மையில் நிறைவுகொண்ட வெண்ணிலா
அந்தம் இல்லா உந்தன் அருள் அடைந்த தலைவியாம்
அகந்தனில் வதிந்திடும் அன்னை சித்தி பாத்திமா...
அணைந்திடாத

5. உகந்து தேனின் தமிழிலே ஓதும் இந்த பாட்டிலே
சுகந்த மேவசெய்திடும் சுவனமன்றின் தூமலர்
வையம்தனில் பண்பின் ஒளிவீசும் தரலமாம்
அகம்தனில் வதிந்திடும் அன்னை சித்தி பாத்திமா...
அணைந்திடாத

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுஸைன் அவர்கள் அருளியது**

புனித பொன்னாட்டை பார்க்க பொன்னூர் மதீனம் பார்க்க
வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதிகாணலாம் வாரீரோ ஏகலாம்

1. பேரார்வம் மீறவே பெருமானின் பாதமே
    சீராக போற்றுவோம் செல்வோம் ஒன்றாகவே
   பயகம்பர் தானம் பார்க்க பவரோகம் தன்னை போக்க
    வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதி காணலாம் வாரீரோ ஏகலாம்...புனித

2. மக்காவின் மீதிலே தக்கோனின் தூதராய்
    முத்தாய் உதித்த கோன் மிளிரும் மதீனமே (2)
   எக்காலம் ஏற்றமிக்க எழில்சேர் தலத்தை பார்க்க
    வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதிகாணலாம் வாரீரோ ஏகலாம்... புனித

3. பழிமாந்தர் வாழ்விலே தடுமாறிடாமலே
    பாதை வகுத்த மாநபி வாழ்மதீனமே - ஆளும்மதீனமே
   கடிசூழ் ரவ்ழாவைப் பார்க்க கானீங்கும் ஜோதிபார்க்க
    வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதிகாணலாம் வாரீரோ ஏகலாம்... புனித

4. அரசாளும் வேந்தராம் அறப்போரின் வீரராம்
    அஹ்மத் மாமுஸ்த.்.பா அமைந்தார் மதீனமே - ஆளும் மதீனமே
   அகமேவும் கள்ளம் நீக்க அருள்ஜோதி தன்னை பார்க்க
    வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதிகாணலாம் வாரீரோ ஏகலாம்... புனித

5. அறிந்தோர்கள் உள்ளமே அமுதாகும் இல்லமே
    அடியேன் மஹ்மூத் ஹுஸைன் நலம்நாடும் தேசமே-வளம்நாடும் தேசமே
   வடிவார் மகானைப்பார்க்க வண்ணமலர்ச் சோலை பார்க்க
    வாரீரோ சோதரரே ஏகலாம் வகுபதிகாணலாம் வாரீரோ ஏகலாம்... புனித

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

மாசிலாத பொன்போலே மானிடத்தின் கண்போலே
 வானுலாவும் தேசான சோமன்போலே
வாகாகும் பேரொளி நீரே நபிநீரே நபிநீரே ... மாசிலாத

1. மாமக்க மீதிலே மதியாகும் ஏகனின்
 மாண்புற்ற தூதராய் மனமோடு தோன்றினீர்
 மிக்க புகழ்சேர் மன்னர்நீர் ஹக்கனருள்சேர் அண்ணல்நீர்
 வானுலாவும் தேசான சோமன்போலே
 வாகாகும் பேரொளி நீரே நபிநீரே நபிநீரே... மாசிலாத

2. காரிருள் நீக்கிடும் கதிரோனைப் போலவே
 வாகுரையோர்குயர் நேர்வழி காட்டிடும்
 கருணைசுரக்கும் கொண்டல்நீர் பொறுமை அதற்கே கொண்டேநீர்
 வானுலாவும் தேசான சோமன் போலே
 வாகாகும் பேரொளி நீரே நபிநீரே நபிநீரே... மாசிலாத

3. அல்லாஹ்வை அண்டியே அஞ்சிநாம் வணங்கவே
 இல்லை மற்றொன்றுமே என்றே இயம்பினீர்
 அல்லலகற்றும் வள்ளல்நீர் அன்பு மிகைத்த செம்மல்நீர்
 வானுலாவும் தேசான சோமன் போலே
 வாகாகும் பேரொளி நீரே நபிநீரே நபிநீரே ... மாசிலாத

4. மாமதீனாவிலே வதிந்தாடும் வேந்தலே
 மறைவேதப்போதரே மஹ்மூது நாதரே
 மங்கிடுமோ நும்நாமம்தான் தங்கிடுமே எந்நாளும்தான்
 வானுலாவும் தேசான சோமன்போலே
 வாகாகும் பேரொளிநீரே நபிநீரே நபிநீரே... மாசிலாத

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

ஏகோனிறைத்தூதர் தாஹா ரசூல்
ஏந்தல் நபி மாநாதரே... ஏகோனிறை

1. எழில் தங்கும் சீர்மக்கா நகரத்தின் தன்னிலே
ஆமீனா தம் அன்புமேவும் மைந்தராக வந்தவர்
ஏந்தல் நபி மாநாதரே ... ஏகோனிறை

2. மடமை நிரம்பிய மாக்களின் வாழ்விலே
மாற்றமே புரிந்து சாந்திமார்க்கம் தந்த வள்ளலே
ஏந்தல் நபி மாநாதரே ... ஏகோனிறை

3. அண்ணல் உமை இறை அமைத்திராவிடில்
மண்ணகம் எனும் உயர்ந்த விண்ணகம் உண்டாகுமோ
ஏந்தல் நபிமாநாதரே ... ஏகோனிறை

4. கஹனத்திலங்கிடும் முழுமதிபோலவே
காசிமேவும் தேசுசேர்மு காரணிந்தமாகுமோ
ஏந்தல் நபி மாநாதரே ... ஏகோனிறை

5. பண்சொல்லுவோன் மஹ்மூத் ஹுசைனெனின்
பாலனுள்ளம் மீது நாளும் சீலமோங்கச்செய்குவீர்
ஏந்தல் நபி மாநாதரே ... ஏகோனிறை

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

தெள்ளமுதம் என இனிக்கும் தெளிவுரையாலே
மக்கள் உள்ள மிசை நெறிவிதைக்கும் உமரொலிமேதே
தெள்ளமுதம்

1. வல்ல இறை அவன் உகந்த ஒலி அறவோர்கள் - நிறை
நல்லபதி காஹிர் உறை நவமணி நீரே
தொல்லை துயர் நீங்க தொடர்ந்து நலமோங்க
சொல்லுலகில் எனக்குதவி தந்திடுவீரே ... தெள்ளமுதம்

2. அண்ணல் அப்துல்காதிர் அவர் அருந்தவச்சேயா
மண்ணமைத்த முதலவனின் மாண்புறு நேயா
எண்ணி உமது நாமம் இதயமுருக பாடும்
என் இதயம் ஒளிபெறவே உதவிடுவீரே ... தெள்ளமுதம்

3. கருத்தொளிரும் காவியமாய் காசினிபோற்றும் - மிகு
திருவிளங்கும் அல்ல∴பல் அலி∴ப் தந்தவர் நீரே
பொருத்தமுடன் இங்கே புகழுடனே வாழ
உரித்துடனே வேண்டுகிறேன் உதவிடுவீரே... தெள்ளமுதம்

4. மூவிரண்டு வருடங்களாய் மஸ்ஜிதுந் நபவி - தனில்
செவ்விய நற்போதகராய் திகழ்ந்தவர் நீரே
கௌவு பிணிகள் மாற கவலை அகன்று ஓட
எவ்வமற எனக்கு இங்கே துணைபுரிவீரே ... தெள்ளமுதம்

5. தங்கள் புகாரி ஜி∴ப்ரீ தவமணியோர்க்கே - இங்கு
துங்க கலீபா மெனுமோர் தகநிலை ஏற்றீர்
தங்கடத்திலாக்கும் தீயர் உறவை நீங்கி
இங்கிதமாய் பாடும்வகை ஈந்திடுவீரே... தெள்ளமுதம்

6. மெத்த மணம்கமழும் தைக்கா மன்றத்தைதேடி - வந்து
நித்தமுத்து சந்நிதியில் நின்றுமை நாடி
சித்தங்கனிந்து வேண்டி சீர்நும்புகழை பாடும்
பவுத்திரன் ஜலீலின்முகம் பார்த்திடுவீரே ... தெள்ளமுதம்

7. தீந்தமிழின் இசையில் உங்கள் திருப்புகழ் சொன்னோர் - அதை
சந்தமுடன் பாடுகின்ற சகலரும் இங்கே
அந்தமுற வாழ அவனருளைத்தேட
சந்ததமும் துணைபுரிந்தே காத்திடுவீரே ... தெள்ளமுதம்

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுஸைன் அவர்கள் அருளியது**

யாமுஹிய்யித்தீனும்நாமம் யாம்புகழ்ந்தோம் பாரிலே
ஏகநாயன் தூதர்தாஹா ஏந்தலர்தம் பேரரே... யாமுஹிய்யித்தீனும்

ஏகத்துவத்தின் இனிய தென்றல்
இகத்திலெங்கும் வீசவே
தாகித்திருந்தும் சேவைசெய்த
தங்கமே அப்துல் காதிரே... யாமுஹிய்யித்தீனும்

ஆத்ம பிணிகள் அகற்றியுள்ளில்
அரிய ஞானம் ஏற்றியே
அழகு இஸ்லாம் தீனைக்காத்த
அண்ணலே அப்துல் காதிரே... யாமுஹிய்யித்தீனும்

பாரில் ஒலிமார் தோளிலுங்கள்
பாதந்திகழும் வண்ணமே
சீரின் குத்பாய்ப் பேரிலங்கும்
சீலரே அப்துல்காதிரே... யாமுஹிய்யித்தீனும்

அன்னை ஆணை மீறிடாமல்
சொன்ன உண்மை வாக்கினால்
கண்ணைத் திறந்தீர் கள்வர் நெஞ்சின்
கௌது யாஅப்துல்காதிரே... யாமுஹிய்யித்தீனும்

காசெறிந்தே வாவி விரிந்தே
மேவும் பகுதாதாள்பவா
பாசொலும் மஹ்மூதுஸைனின்
பாசரே அப்துல் காதிரே... யாமுஹிய்யித்தீனும்

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

இத்தரை விண்ணாளும் கத்தனைஎன்னாளும்
பக்தியாய்ப் பணிந்திடுவாய்
நித்தியமாகிய நிலைபொருள் அவனே
சத்தியமாகவே அழிந்திடும் பிறவே - இத்தரை

1. அன்னையின் கருவினில் உனையமைத்தானே
   அவனியில் மனிதனாய்ப் பிறக்கவைத்தானே
   அன்புடனே சிந்தை யறிவளித்தானே
   ஆதரிப்போ னென்றும் ஆதிமுன்னவனே - இத்தரை

2. இன்னிலம் நலம்பெற இன்ப மெய்வேதம்
   இறக்கினன் இடர்பவம் இழிவகன்றோட
   கண்ணியமாகிய நபி மணியாலே
   உன்னதமாய் உண்மை நெறியளித்தானே- இத்தரை

3. செப்பிடும் செழுந்தமிழ் இன்னிசையாலே
   செய்யிது அஹ்மதின் சிறு பணியாலே
   சேர்ந்திட வேண்டினேன் செறிபலன்தானே
   சேதமிலான் றஹ்மானவன் பாலே - இத்தரை

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹுசைன் அவர்கள் அருளியது**

உயர் விண்ணின் நிறைமதி நாணு மெழிலொடு
அண்ணல் முஹம்மது தோன்றினார்-- உயர்

மண்ணூரின் இதயமதாம் மக்காவிலே
மங்கையர் ஆமினார்கண் மணியதாக
முன்னோனின் தூதர்களில் முத்திரையாய்
முத்தான கொள்கையுடை மேதையராய்... எங்கள்
கண்ணிற் கருமணியாகப் புவிமிசை
காசிம் முஹம்மதர் தோன்றினார் --- உயர்

பூ உலகில் மானிட நீ பிறந்த தேனோ
பூர்வீக உன்சரிதை மறந்த தேனோ
பூதஉடல் புகுந்திருக்கும் ஆத்ம ஞானம்
புரிந்திடா திருந்துவிட்டால் யாது லாபம் - என்று
பூரணமாகிய ஞானம் புகட்டிட
பூமான் முஹம்மது தோன்றினார் -- உயர்

மகிவாழ்வின் சுகமின்பம் மகிழ்ச்சியாவும்
மரணத்தால் மாய்ந்திடும் நீமரித்தபின்னே
மறுவாழ்வு உண்டதுதான் மறுமையாகும்
மகிழ்ந்தங்கு வாழஇங்கே நன்மை தேடு - என்று
மன்பதையோர் உய்யும் மார்க்க மளித்திட
மன்னர் முஹம்மது தோன்றினார் -- உயர்

அரசியலில் பொருளியலில் அவனி வாழ்வில்
அருளிலகும் ஆன்மீக மத்தனைக்கும்
அழகான முன்னோடியாயிருந்து
அறமோங்கச் செயலாற்றிக்காட்டி விட்டார்
அன்பு மலர்ந்திட பண்பு புலர்ந்திட
அறிஞர் முஹம்மது தோன்றினார் -- உயர்

காயல் பிறைக்கொடியான்
**S.M.B. மஹ்மூது ஹூசைன் அவர்கள் அருளியது**

எண்ணயெண்ண இதயத்தில் என்னாளும் இனிக்குது
அண்ணல் அப்துல்காதிறு உங்கள் பேரு - இந்த
மண்ணிலெங்கும் மணக்குது உங்கள் சீரு... எண்ணயெண்ண

மண்மேல் ஒலிகட்குயர் மகுடபதி - என்ன
மாவிறை யோனளித்த அரிய நிதி
விண்ணோர் புகழுந்திரு முழுமைமதி - பண்பு
வீசுமுறையளித்த அறிவு நதி... எண்ணயெண்ண

தூயோனருட்சுனையில் திழைக்கவென்று - விழி
தூங்காதிரவு பகல் வணங்கி நின்று
மாயாது தீன்வாழ மகிமீது - செய்த
மாதவரும்மை நெஞ்சம் மறவாது... எண்ணயெண்ண

ஜீலான்பதி பிறந்த செழுந்சுடரே - மா
மேலோன் மறையுணர்ந்த மகத்துவரே
பாலார்ந்த மெஞ்ஞான நிலையாலே - இந்தப்
பாரிடை மேதையெனத்திகழ்ந்தீரே... எண்ணயெண்ண

ஓராயிரம் முறையென் பெயருரைத்து - அழைப்பின்
நேராய் பதிலிறுப்பேன் என நவின்றீர்
பேராபத்தை தவிர்க்கும் குருகோனே - முன்னன்
பேரன்பிற் சுடரிடும் பெருமானே... எண்ணயெண்ண

பவமெனுங் கருமையில் படிந்துழலும்
படிவாழும் மனுவினம் பயனடையும்
தவமுறை ஆறணம் தெளிந்துரைக்கும்
தகைமிகும் யோகியர் குலதீபம்... எண்ணயெண்ண

*உதுமான் நெய்னா புலவர் (ரழி) அவர்கள் அருளியது*

ஆளும் நபிநாதரே எனையாளும் நபிநாதரே
ஆதியருள்தூதரே எனை ஆளும்நபிநாதரே

அ.சரணங்கள்

1. நாளும்புகழுமென்கோவே
   நாடும்குணமா மஹ்பூபே
   வாழும் மேலான ஹபீபே
   ஆளும் நபிநாதரே,.. ஆளும்

2. வானின்மதி போற்றவே
   வரிசைமன்னர் ஏத்தவே
   ஆனபுகழ் தோத்தவே
   வந்தாளும் நபிநாதரே... ஆளும்

3. வம்பன் இபுலீசுனேக
   வாதுசெய்வானோ வென்தேக
   துன்பமெல்லாம் ஓடிப்போக
   ஆளும் நபிநாதரே,... ஆளும்

4. மையல்மாது செய்யுஞ்சூது
   மாத்திவைக்க வேகூடாது
   அய்யமற வேயிப்போது
   ஆளும் நபிநாதரே,... ஆளும்

5. மக்காவாழும் கற்பகாவே
   மகிழும் அப்துல்லாஹ்மகவே
   ஹக்கனருள் முஸ்த.ஃபாவே
   ஆளும் நபிநாதரே... ஆளும்